1 3 MAR 2010

## சுருக்கம்

மாநகராட்சி/நகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்தின் கீழ் சந்தா தொகை, வட்டித் தொகை மற்றும் அரசு பங்குத் தொகை கணக்கீடு செய்து வழங்குதல் – நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக்கல்வித்(க்யு2)துறை

அரசாணை(நிலை)எண்.70 நாள் 17.03.2010.

(திருவள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 3)

படிக்க:

1. அரசாணை(நிலை)எண்.215, பள்ளிக்கல்வித் துறை, நாள் 29.08.2007.
2. அரசுக் கடித(பல்வகை)எண்.93, பள்ளிக்கல்வித் துறை, நாள் 3.4.2009.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.60741/எச்4/2002, நாள் 19.8.2009 மற்றும் 3.12.2009.
4. தொடக்கக்கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.30320/சி2/07, நாள் 12.12.09.

---

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாநகராட்சியில் மேல்நிலை/உயர்நிலை பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி அரசு பங்கு தொகைக்கு உரிய கருத்துருவை பள்ளிக்கல்வி இயக்குநரும், நகராட்சி மற்றும் மாநகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி அரசு பங்குத் தொகைக்கு உரிய கருத்துருவை தொடக்கக்கல்வி இயக்குநரும் உடனடியாக அரசுக்கு அனுப்பமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காணும் அரசாணைப்படி அரசு பங்குத் தொகை மற்றும் வட்டித் தொகையினை தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோருக்கு உரிய கணக்கு தலைப்புகள் வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் பள்ளிக்கல்வி துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்தின்கீழ் சந்தா தொகை, வட்டித் தொகை மற்றும் அரசுப்பங்குத் தொகை வழங்குவதற்கு 2009–2010 நிதி ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ.113 இலட்சம் மற்றும் 2010–2011ஆம் நிதி ஒதுக்கத்தில் ரூ.42.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசை கோரியுள்ளார்.

3. மேலே 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக்கல்வி இயக்குநர், தொடக்கக்கல்வி துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி பணிக்கொடைத் திட்டத்தின் கீழ் சந்தா தொகை, வட்டித் தொகை மற்றும் அரசுப்பங்குத் தொகை வழங்க 2009–2010 ஆம் நிதியாண்டில் அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு கோரி பெறப்பட்டதில் 2009–2010 ஆம் நிதியாண்டின் திருத்திய மதிப்பீட்டில் தொடக்கக்கல்வி ரூ.358.20 இலட்சமும் மற்றும் நகராட்சி பள்ளிகள் ரூ.118.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

4. பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. பள்ளிக்கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி பணிக்கொடைத் திட்டத்தின் கீழ் சந்தா தொகை, வட்டித் தொகை மற்றும் அரசு பங்குத் தொகை வழங்குவதற்கு 2009–2010 நிதி ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ.113 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் தொடக்கக்கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி பணிக்கொடைத் திட்டத்தின் கீழ் சந்தா தொகை, வட்டித் தொகை மற்றும் அரசு பங்குத் தொகை வழங்குவதற்கு 2009–2010 ஆம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் தொடக்கக்கல்விக்கு ரூ.558.20 இலட்சமும், மற்றும் நகராட்சி பள்ளிகளுக்கு ரூ.185.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. பள்ளிக்கல்வி இயக்ககம் சார்ந்து கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம்.

**Government Contribution**

**2235 Social Security and Welfare**

"60 Other Social Security and Welfare Programmes 200 other Programmes – Schemes in the Eleventh Five year Plan I Non-Plan DH- Special Provident Fund Cum-Gratuity Schemes for Municipal and Corporation High/Higher Secondary Schools – Controlled by the Director of School Education 10 Contributions 01 Contribution to Specific Fund (DPC 2235 60 200 DH 1018)"

**Interest to be Paid by Government**

**2049 Interest Payments**

"03 Interest on Small Savings, Provident Funds, etc. 111 Interest on Other Deposits and Account Schemes in the Eleventh Five year Plan ! Non-Plan AM- Interest on Special Provident Fund – Cum – Gratuity Schemes for Municipal and Corporation High/Higher Secondary Schools – Controlled by the Director of School Education. 25 Interest (DPC 2049 03 111 AM 2505)

6. தொடக்கக்கல்வி இயக்ககம் சார்ந்து கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம்:–

**Government Contribution**

**2235 Social Security and Welfare**

"60 Other Social Security and Welfare Programmes 200 other Programmes. DG Special Provident Fund Cum – Gratuity Schemes for Municipal and Corporation Elementary Schools – Controlled by the Director of Elementary Education 10 Contributions 01 Contribution to Specific Fund (DPC2235 60 200 DG 1010")

**Interest to be Paid by Government**

**2049 Interest Payments**

03 Interest on Small Savings, Provident Funds, etc. 111 Interest on other Deposits and Accounts AL Interest on Special Provident Fund – Cum – Gratuity Schemes for Municipal and Corporation Elementary Schools – Controlled by the Director of Elementary Education 25 Interest,
(DPC 2049 03 111 AL 2507)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.9834/Edn-II/10, நாள் 12.03.2010-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
உள்ளாட்சி நிதித்தணிக்கை அலுவலர்,
குறளகம், சென்னை–108.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35/19.
அனைத்து கருவூல அலுவலர்கள்
மாநகராட்சி ஆணையர், சென்னை/மதுரை/
கோவை/சேலம்/திருநெல்வேலி/திருச்சி
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
நகல்
நிதி(கல்வி–II)த்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால் துறை,
சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9
பள்ளிக்கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//